2009
PUBLIC LIBRARY
JAFFNA

விலை ரூபா 15.00
REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876
இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

06-12-2009
PAATHUKAVALAN
மலர்: 133 இதழ் : 23 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

# பொதுநிலையினரின் விசுவாச வாழ்வே அனைத்திற்கும் அடிப்படைக் காரணம்

## பொதுநிலையினர் மகாநாட்டில் குருமுதல்வர்

**பொதுநிலையினர் எழுச்சி மகாநாடு புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் 29.11.2009 அன்று நடைபெற்றது. அதில் குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில், "பொதுநிலையினரின் விசுவாச வாழ்வே அனைத்திற்கும் அடிப்படைக் காரணம்" என்றார். மேலும் தனது உரையில், "யாழ். திருச்சபைக்கு இன்றைய நாள் ஒரு பொன்னான நாள். இதுவரை காலமும் நாம் கூட்டாக இயங்க முடியாதபடி நாட்டுச் சூழல் காரணமாயிருந்தது. இப்போது அது கைகூடியுள்ளது. பொதுநிலையினரும் திருநிலையினரும் தத்தமது பணியைத் தாமே செய்ய வேண்டும். ஏனெனில் இரண்டு பணிகளையும் ஒருவரே செய்ய முடியாது" என்பவற்றைச் சுட்டிக்காட்டினார்.**



### எழுச்சி - முதிர்ச்சியே வளர்ச்சி

பொதுநிலை ஆணைக்குழுவின் புதிய இயக்குனர் M.V.E. இரவிச்சந்திரன் அடிகளார் தமது உரையில், பொது நிலையினரின் எழுச்சியும் முதிர்ச்சியுமே திருச்சபையின் வளர்ச்சி என்றும், 'புதிய விதமாக திருச்சபை இருத்தல்' எபைது பர்றி ஆசிய ஆயர் மன்றம் அழைப்பு விடுத்திருக்கிறது. எனவே திருநிலை, துறவு நிலை, பொதுநிலையினர் இணைந்து செயற்படும் திருச்சபையாக - பங்கேறகும் திருச்சபையாக, மாற வேண்டும் என்றும் குறிப்பிட்டாா.

### 2ம் வத்திக்கான் சங்கம்

பொதுநிலையினரின் பொற்காலப் பொக்கிஷமான 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளின் பக்கங்களில் இருந்து, பொதுநிலையினரின் இயல்பும், பணியும் திருச்சபையின் போதனைகள் பற்றியும் அருள்பணியாளர் J.J. மவுலிஸ் அடிகள் கருத்துரை வழங்கினார்.

### கயிறு இழுப்பு போட்டியல்ல

திரு. A. சந்தியாப்பிள்ளை அவர்கள் தமது உரையில் திருச்சபையின் வளர்ச்சி, திருநிலையினருக்கும் பொதுநிலையினருக்கும் இடையேயான ஒரு கயிறு இழுப்பு போட்டியல்ல. உடன் உழைப்பாளிகள் என்ற நிலையில் இதயபூர்வமாக செயற்பட வேண்டும் என்றார்.




### பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட

திருநிலையினர் - பொதுநிலையினர் இருசாராருக்கும் மாற்றங்கள் ஏற்பட கூடிய மனநிலை வேண்டும். இயேசு அனுபவம் வாழ்வாக மாற வேண்டும், சாதிகள் ஒழிக்கப்பட வேண்டும், பாரபட்சமற்ற நிலை உருவாக வேண்டும். ஈடுபாடு கொள்ளத் தூண்ட வேண்டும். இதற்கு பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்" என்றார் அருட்பணியாளர் அன்ரன் மத்தாய் அடிகள்.

(8ம் பக்கம் பார்க்க...)

## அமலமரித் தியாகிகளின் அதி உயர் மேலாளர் யாழ் வருகை



அமலமரித் தியாகிகளின் அதி உயர் மேலாளர் அதி வண. வில்ஷெய்ம் ஸ்ரெக்கிளிங் அமதி அடிகளார், இம்மாதம் 12ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். போரின் வடுக்களால் வேதனையடைந்து வாழ்வில் களைப்படைந்து வாழும் எம் மக்களுக்கும் வடமாநில அமதிகளுக்கும் ஒரு நம்பிக்கையை ஊட்டி ஆறுதல் அளிக்க வரும் தமது மேலாளரின் வருகைக்காக வடமாநில அமதிகள் அனைவரும் மகிழ்ச்சியோடு காத்திருக்கின்றனர். அமதிகளின் பணித்தளங்களைச் சந்தித்து அவர்களோடு தனது ஒன்றிப்பை வெளிப்படுத்த வருகைதரும் அடிகளார் அமதிகளுக்கான வருடாந்த ஞானொடுக்கத்தைக் கோப்பாயில் உள்ள 'சங்கமம்' எனும் மடத்தில் முன்னெடுப்பார் என கூறப்படுகிறது. அமதிகளின் அதி உயர் மேலாளர் அவர்களை அமதிகளுடன் சேர்ந்து நாமும் வரவேற்கின்றோம்.

## பூரிப்படைகிறோம்



**யாழ் . அமலமரித் தியாகிகளுக்கு இரு புதிய பணியாளர்கள்**

குருக்கள் ஆண்டாகிய இவ்வாண்டில், யாழ் அமலமரித் தியாகிகளின் இரு அருட்சகோதரர்கள், றொபேட் றொபின்சன் அமதி, பாக்கியநாதன் கிறிஸ்ரி நிர்மலறாஜன் அமதி, ஆகிய இருவரும் யாழ் ஆயர் பேரருள்திரு. இ. தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால், அமலமரித் தியாகிகள் சபை முதல்வர் அதிவண. வில்ஷெய்ம ஸ்ரெக்கிளிங் அமதி, அவர்களின் பிரசன்னத்தில், மார்கழித் திங்கள் 14ம் நாள் யாழ். தூய மரியன்னை பேராலயத்திலை குருக்களாகத் திருநிலைப் படுத்தப்படவுள்ளனர்.

அருட்சகோதரன் றொ. றொபின்சன் கரம்பொன் தூய செபஸ்தியார் பங்கிலே திரு. திருமதி. றொபேட் ஜிராயேஸ்வரி தம்பதியினரின் தலை மகனாய் 1978 வைகாசி மாதம் 30ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கரபொன் புனித சின்னத் திரேசா மாகா வித்தியாலயத்திலும், இடை நிலைக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இளவாலை, புனித கென்றியரசர் கல்லூரியிலும், தனது உயர்தரக் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் மேற் கொண்டார்.

சிறு வயது முதல் தனது இறை அழைத்தலை உணர்ந்து கொண்ட இவர் தனது ஆரம்ப குருமட

(8ம் பக்கம் பார்க்க...)

## வாழ்த்தும் அழைப்பும்

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் அதிவிசேட சித்திகளைப் பெற்றுக் கொண்ட மாணவ-மாணவியருக்கும், பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும் காவலன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. (ஓட்டப் போட்டியில் முதலாவதாக வருவது முக்கியமல்ல. வந்து சேர்வது தான் முக்கியம் என்ற ஒரு தத்துவமும் உண்டு.)

மாணவர்களே பரீட்சையை நிறைவு செய்த நிலையில் உங்கள் வாழ்க்கைத் தெரிவு பற்றிச் சிந்திக்கிறீர்களா? யாழ். மறைமாவட்டக் குருவாகிப் பணிசெய்யும் நல்லெண்ணத்தைக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பங்குத்தந்தையுடன் தொடர்பு கொண்டு, புனித மடுத்தினார் குருமடத்தில் இணைய உங்களை அழைக்கின்றார்கள். பரபரப்பான உலகில் மறைபரப்புப் பணிவாழ்வுக்கு எங்களை அர்ப்பணிப்போமா?

## அமலமரியே வாழ்க!

மரியன்னை மாசில்லாமல் உற்பவித்த திருநாள மார்கழி 8. இந்நாளை கடன் திருநாளாகத் திருச்சபை அனுசரித்து வருகின்றது. இந்நாளில், எமது மறைமாவட்டத்தில் பணிபுரியும் அமலமரித் தியாகிகள் சபைத் துறவிகளுக்கு காவலன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக கொள்கிறது.

## எதிர்பாருங்கள்

பாதுகாவலன் அன்பர்களே! காவலனின் அடுத்த வெளியீடு கிறிஸ்மஸ் சிறப்பு மலராக வெளிவர இருக்கின்றது என்பதை உங்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

## பிரமாண்டம்

டைநோசர் என்ற மிகப்பெரிய ஒரு விலங்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அது வாழ்ந்ததற்கான தடயங்களும் ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.
இன்னுமொரு செய்தி
அவ்வாறான ஒரு பெரிய விலங்கை மீண்டும் உருவாக்க முயற்சிகள், ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பொது நிலையினர் என்ற மிகப்பிரமாண்டமான ஒரு சக்தி - இயக்கம் - மக்கள் மயப்பட்ட ஓர் உந்தல் எழுச்சி ஆதித் திருச்சபையிலே இயல்பாகவே இருந்ததை பயன்தந்ததை புதிய ஏற்பாடு தெளிவாக காட்டுகிறது.

“நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர். பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தை பிட்டு உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள்” என்கிறது திருத்தூதர் பணிகள் நூல். உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் தூய பவுல் மனந்திறந்து திருத்தூதுப்பணியில் தன்னுடன் உழைக்கும் விசுவாசிகளுக்கு வாழ்த்துக்கள் கூறுகிறார். “என் உடன் உழைப்பாரோடும் என்னோடும் சேர்ந்து நற்செய்திக்காகப் போராடினார்கள். அவருடைய பெயர் வாழ்வோரின் நூலில் எழுதபட்டுள்ளது” என்கிறது பவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடிதம்.

இந்த இறை விசுவாசிகள் - வெகுஜனங்களின் எழுச்சியே திருச்சபையின் உயிர்த்தன்மைக்கும், வளர்ச்சிக்கும் அதன் முதிர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்கியது என்பது மறுக்க முடியாத உண்மை.

இதை நன்குணர்ந்த திருச்சபை 2ம் வத்திக்கான் சங்கத்திலே திருச்சபையில் பொது நிலை விசுவாசிகளுக்குரிய இடத்தை மீள வலியுறுத்தியுள்ளது. திருத்தூதுப் பணியில் இவர்களுக்கே உரித்தான - முற்றிலும் இன்றியமையாத பங்கு பற்றி.முன் எப்போதும் இல்லாதவாறு பருந்துரைக்கின்றது. ஆனால் இவையெல்லாம் பேசி - முடிவெடுக்கப்பட்டு 45ஆண்டு கடந்த பின்னும் இன்றுவரை ஒரு சில செயற்பாடுகள் தவிர திருச்சபையில் பொது நிலையானது “திரிசங்கு நிலையிலே” இருக்கிறது என்பது வருத்தத்திற்குரியதே.

திருநிலையினர் - பொதுநிலையினருக்கிடையே ஏற்படுகின்ற பணி சார்ந்த சரியான புரிதல் இன்மை. பொது நிலையினருக்கு திருச்சபையில் அவர்தம் இடம், கடமை, உரிமை பற்றியதெளிவின்மை, உலகியல் வாழ்க்கை முறைக்குள் சற்ற அதிகமாகவே அமிழ்ந்து போவதால் ஏற்படும் இறை நம்பிக்கை சார்ந்த செயல் புறக்கணிப்பு, மற்றும் திருநிலையினரின் ஏகபோக அதிகாரம் என்பனவே பொது நிலை எழுச்சிக்கு தடையாகும் மூல காரணங்கள்.

இத் திரைகளை அகற்றி, ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தும் போக்கை கைவிட்டு “திருச்சபையின் பணிகளில் என்னை இணைத்துக் கொள்வேன்” என்ற ஆக்கபூர்வமான மனநிலைகளுடன் - ஈடுபாட்டுடன் செயற்பட முன்வருவோமா?
அந்த சக்தி காட்டாற்று வெள்ளம் போன்றது. மிகப்பிரமாண்டமானது.

# சிந்தனைத் தூறல்கள் - 04

**அப்துல் ரகுமானின்** சிறகுகளின் நேரம்

## திறந்த புத்தகங்களும் பாம்புப் புற்றுகளும்

**சென்ற வாரத் தொடர்ச்சி...**

அவர்கள் மன்னித்தால்தான் திரும்பி வரவேண்டும். அவர்கள் மன்னிக்கவில்லையென்றால் மன்னிக்கும்வரை அவர்கள் வீட்டுக்குமுன்னால் உட்கார்ந்திருக்க வேண்டும்.

இது அந்த ஆதிவாசிகளுடைய கலாச்சாரம். அவர்கள் கனவுகளையும் மறைக்கக்கூடாது. கனவிலும் தப்பாக நடக்கக்கூடாது.

அவர்கள் உளவியல் படித்தவர்கள் அல்லர். அப்படி ஒரு துறை இருக்கிறது என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது.

அவர்களை அறியாமலே அவர்கள் ஓர் அருமையான உளவியல் மருத்துவத்தைச் செய்கிறார்கள்.

அதன்மூலம் அவர்களுடைய மக்கள் தப்பாக நினைப்பதைக்கூட நிறுத்தி விட்டார்கள்.

தவறான நினைவுகள் இல்லையென்றால் கனவுகளுக்கும் அவசியமில்லை. ஆம். அந்த ஆதிவாசிகள் பெரும்பாலும் கனவே காண்பதில்லை. படுத்ததும் உறங்கிவிடுகிறார்கள்; ஆழ்ந்த உறக்கம். உண்மையில் கனவு என்பது உறக்கத்தின் நோய். ஆரோக்கியமான உறக்கம் என்றால் கனவு இருக்கக்கூடாது.

கனவுகளோடுகூடிய உறக்கத்தைத் தொந்தரவுக்கான உறக்கம் (disturbed sleep) என்றே கூறுவார்கள்.

அந்த ஆதிவாசிகள் கனவு என்ற நோய்க்கான மருந்தைக் கண்டுபிடித்து விட்டார்கள். அதனால் அவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆதிவாசிகளைப் பார்த்து நகரவாசிகள் 'காட்டுமிராண்டிகள்' என்கிறார்கள்.

நோயாளிகள், ஆரோக்கியமானவர்களைக் காட்டுமிராண்டிகள் என்கிறார்கள். அந்த ஆதிவாசிகள் திறந்த புத்தகமாக இருக்கிறார்கள். நகரவாசிகளோ 'எந்தப் பாம்பு இருக்குமோ? எத்தனை பாம்பு இருக்குமோ?' என்று அஞ்சும்படி புற்றைப் போல இருக்கிறார்கள்.

ஆனால், இந்தப் பாமபுப்புற்றுகள் திறந்த புத்தகங்களைக் காட்டுமிராண்டிகள் என்கின்றன.

அந்த ஆதிவாசிகள் பனித்துளிபோல் தூய்மையாக இருக்கிறார்கள். நகரவாசிகளோ சாக்கடையாய் இருக்கிறார்கள்.

ஆனால், சாக்கடை, பனித்துளியைப் பார்த்துக் காட்டுமிராண்டிகள் என்கிறது. நகரவாசிகள் ஆதிவாசிகளைப் பார்த்து, 'இவர்கள் நாகரிகமற்றவர்கள்; நாம் நாகரிகமானவர்கள்' என்கிறார்கள். ஆனால், உண்மையில் நாகரிகம்தான் அநாகரிகமாக இருக்கிறது; அநாகரிகம்தான் நாகரிகமாக இருக்கிறது.

(தூறல் தொடரும்...)

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு. ஜோசப் செல்வன் பிகிறாடோ செ.தா

ஒவ்வொரு ஞாயிறு சிந்தனைத் துளிகளையும் வாசிக்கும் முன்னர் அன்றைய ஞாயிறு தினத்திற்குரிய திருவாசகங்களை நன்றாக வாசித்து அவ்வாசகங்களில் உங்களின் மனதினைத் தொடும் வசனங்களை தியானித்து அதன் பின்னர் இந்த சிந்தனைத்துளிகளை தியானத்தோடு வாசித்தால் நற் பயன் பெறலாம்.

## திருவருகைக்காலம் ௨ஆம் ஞாயிறு

பாருக் 5:1-9, பிலி 1:4-6, 8-11, லூக் 3:1-6

### மனம் மாறினால் மறுவாழ்வு!

இறைமகன் இயேசுவின் இனிய நாமத்தில் எனது அன்பான பெற்றோர்களே, சகோதர சகோதரியரே, அன்புப் பிள்ளைகளே! உங்கள் அனைவருக்கும் இறையாசீர் கூறுவதிலும், இன்னுமொரு முறை உங்கள் அனைவரையும் ஞாயிறு தினத்துளிகளின் வழியாக சந்திப்பதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். நாங்கள் எல்லோருமே இந்த வருடம் கிறிஸ்து பிறப்பு விழாவினை எவ்வாறு கொண்டாடலாம்? எமது ஒளி விழாக்களை அர்த்தமுள்ள ஒளி விழாக்களாக எவ்வாறு மாற்றலாம்? போட்டி போட்டுக்கொண்டு ஒன்று எடுத்தால் இன்னொன்று இலவசம்! எனக் கூறும் கிறிஸ்மஸ் வியாபார விளம்பரங்கள் மத்தியில் எமது விழா இந்த வேளையில் “அடி மரத்தில் கோடாரி வைத்தாயிற்று, நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்” எனப் போதித்த திருமுழுக்கு யோவானின் பாலை வனத்துக் குரல் எம்மை அறுதியான, உறுதியான மனமாற்றத்திற்கு அழைத்து நிற்கின்றது.

இன்றைய நற்செய்தியாளர் புனித லூக்கா ஒரு மருத்துவர் என்பதனாலும், தரவுகள், வாழக்கையின் குறிப்புக்கள் அனைத்தையும் துல்லியமாக எடுத்து விளக்கக்கூடியவர் என்பதனாலும் இன்றைய நற்செய்தியில் நாம் இதுவரை முணுமுணுக்காகத பல பெயர்களும், புதிய இடங்களும் குறிப்பிடப்படுவதனைக் காணலாம். இயேசு ஆண்டவரின் மனித அவதாரம், மனிதகுல வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் உண்மை என்பதனை விசுவசிக்காத பல பேருக்கு ஆணித்தரமாக எடுத்துக் கூற புனித லூக்கா இவ்வாறான. தரவுகளை திரட்டி அன்றைய பாலஸ்தீனத்தின் அரசியல் நிலைப்பாடு (பாலஸ்தீனம் ரோமருடைய அரசாட்சியின் கீழ் இருந்தது) மதநிலைப்பாடு, (அன்னாஸ், கைப்பாஸ் தலைமைக்குருக்களாக இருத்தல்) இடத்தின் நிலைப்பாடு (யோர்தான் ஆற்றின் பகுதி) என்பவற்றினை எடுத்துக் கூறி புனித திருமுழுக்கு யோவானை முன்வைக்கின்றார்.

#### புனித திருமுழுக்கு யோவான்

“ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள்” என எசாயா இறைவாக்கினர் மூலமாக முன்னறிவிக்கப்பட்ட “பாலைவனத்தில் ஒலிக்கும் குரல். இவர்தான் என இன்றைய நற்செய்தி எமக்கு விளக்குகின்றது. ஞானஸ்தானத்தின் மூலம், இறைவனோடு இரண்டற கலப்பதனையும் இதற்கு உறுதுணையாக மனமாற்றமும் பாவ மண்ணிப்பும் அவசியம் என்பதனையும் புனித யோவானுடைய போதனைகள் சுட்டி காட்டுகின்றன. இங்கே “மனமாற்றம்” (Metanoia) என்பது ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய தொன்றாக இருக்கின்றது.

கிறிஸ்தவர்கள் ஆகிய நாம் அனைவரும் அடிக்கடி செய்வது போல, அதாவது தவக் காலத்தில் ஒரு வாழ்க்கை, திருவருகைக் காலத்தில் ஒருவாழ்க்கை, பொதுக்காலத்தில் ஒரு வாழ்க்கை என்று இல்லாமல் “நிலையான, உறுதியான, அறுதியான மனமாற்றத்தினையே மேலே குறிப்பிட்ட “மனமாற்றம்” குறித்து நிற்கின்றது.

#### சிந்தனைக்கு : சாத்தானின் சட்டை

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட ஒரு இந்து மதத்தினைச்சார்ந்த முதுபெரும் அறிஞர் ஒருவர் கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்று பார்க்க மாறு வேடத்தில் கிறிஸ்தவர் செறிந்து வாழும் ஒரு நகரத்திற்கு சென்று ஒரு மாதம் அவர்களோடு வாழ்ந்தார். பின்னர் அவர் தனது இல்லம் வந்து தான் கிறிஸ்தவர்களோடு வாழ்ந்த வாழ்வினை தனது புத்தகம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். “இந்துவாகிய நான் இயேசுவை மனமார நம்பி விசுவசிக்கின்றேன், அவரது போதனைகள், உயிரோட்டமானவை, உடலுக்கும் வாழ்க்கைக்கும் புத்துணர்ச்சியினை அளிப்பவை, ஆனால் கிறிஸ்துவை விசுவசித்து “கிறிஸ்தவர்கள்” என சொல்லிக் கொள்பவர்களில் பெரும்பான்மையோரை நினைத்து மிகவும் கவலை அடைகின்றேன். ஏனென்றால் அவர்கள் எல்லோரும் “சாத்தானின் சட்டையை” அணிந்துள்ளனர். ஞாயிறுதிருப்பலிக்கு வந்து ஆலய வளவுக்குள் நுளையும் முன்னர் அந்த சட்டையை ஆலயத்தின் வெளிச்சுவரில் ஆணி அடித்து மாட்டிவிட்டு, பரிசுத்த கத்தோலிக்கர்களாக ஆலயத்தில் நுளைந்து பலி ஒப்புக் கொடுத்து பின்னர் இயேசு ஆண்டவரை தங்களது பொய்கள், புரட்டுக்கள், கெட்ட வார்த்தைகள் பேசும் நாக்கினை நீட்டி பெற்றுக் கொள்கின்றனர். திருப்பலி முடிந்ததும் ஆண்டவருக்கு ஒரு வணக்கம் ஆலய குருவுக்கு ஒரு வணக்கம் சொல்லிவிட்டு அந்த ஆலய வளவினை விட்டு செல்லும் போது ஏற்கனவே ஆணியில் மாட்டியிருக்கும் “சாத்தானின் சட்டையை” அணிந்து கொண்டு தமது வீட்டுக்குச் சென்று அடுத்து ஞாயிறு வரை ஒரு போலி வாழ்க்கை நடத்துகின்றனர்” இந்த எழுத்தாளன் குறிப்பிட்டது போல எமது வாழ்க்கை இருக்கின்றதா, இல்லையா? எனது அன்பான சகோதரனே சகோதரியே!

அறிவோடு சிந்திக்கின்றவன் தனது வாழ்வினை ஆழமாக ஊடுருவிப் பார்க்கின்றான் ஆழமாக பார்க்கின்றவன் தனது அசிங்கமான பாவங்களைக்கண்டு மனம் வருந்துகின்றான்.
உண்மையிலேயே தனது நிலை
அறிந்து மனம் மாறி விடுகிறவன்
கண்ணீரோடு மனம் மாறி விடுகின்றான்.
அதுவே நிலையான மனமாற்றம்
இந்த மனமாற்றத்தின் காலத்தில் நான் மனம் மாற என்ன முயற்சி எடுக்கின்றேன்?

**வாசித்துப் பார்க்க**

**லூக்கா 18:13**
**லூக்கா 15:4**
**திரு.பாட 51:4**
**லூக் 19:8**

## திருவருகைக்காலம் ௩ஆம் ஞாயிறு

செப்பனியா 3:14-18, பிலிப்பியர் 4:4-7, லூக்கா 3:10-18

### அறிவெல்லாம் கடந்த இறை அமைதி

எனது அன்பான சகோதர சகோதரியரே! ஆண்டவர் இயேசுவின் பிறப்பு நினைவின் ஆயத்தங்கள் ஏக ஆர்ப்பாட்டங்களோடு உலகின் அனைத்துப் பாகங்களிலும் அரங்கேறிக் கொண்டு இருக்கும் இந்த அழகான மனமாற்றத்தின் காலத்திலே வரும் மூன்றாவது ஞாயிறு தினத்தை நாம் எட்டிப்பிடித்துவிட்டோம். கடந்த வாரங்கள் எமக்குள் விட்டுச் சென்ற மனமாற்றத்தின் பதிவுகள் என்ன? என்று சிந்திக்கின்ற அதேவேளை, இயேசு ஆண்டவரை வரவேற்க நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்திலே எவ்வாறான ஆன்மீக ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளோம்? என ஆழமாக சிந்திக்க எமக்கு அழைப்புக் கிடைக்கின்றது.

#### நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

உங்களில் ஆணிகள் அறையப்படுகின்றதனைப் போன்ற இறைவார்த்தைகள் புனித திருமுழுக்கு யோவானுடைய வாய் மொழிகளால் அறிவிக்கப்படுவதையும் மனமாற்றத்தினை அடைய என்ன செய்ய வேண்டும்? என ஆர்வத்தோடு கேட்டு மக்களையும் இன்றைய நாளின் நற்செய்திப் பொழிவு எடுத்துக்கூறுகின்றது. “சீயோன் மகளே அஞ்சவேண்டாம்” கடவுள் உன்னோடு உள்ளார். என்று முதல் வாசக பொழிவு ஆண்டவரின் அன்பின் ஆழத்தையும் அரவணைப்பின் உறுதியையும் எடுத்துக்கூறி நிற்பதோடு, இன்றையநாளின் இரண்டாம் வாசக திருப்பொழிவானது, எதனைப்பற்றியும்

(8ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரித்தாஸ் கியூடெக்
யாழ்.கத்தோலிக்க திருச்சபையின் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம்
HUDEC Caritas
Tel.ph: 021-2222571, 7314 Fax: 021-2228050 Email: hudec@sltnet.lk Website: ww.hudecjaffna.org

## மகளிர் குழுக்களின் செயற்பாடுகள்

இளவாலை மகளிர் குழுக்களினால் மாதகலில் 01.12.2009 விற்பனை நிலையம் ஒன்று இயக்குனர் அருட்பணி.கி.யோ.ஜெயக்குமார் அடிகளாரால் திறந்துவைத்ததுடன், முதல் வியாபாரத்தை இயக்குனர் ஆரம்பித்து வைத்தார். இதில் மாதகல் பங்குத்தந்தை அருட்பணி. ஆனந்தகுமார் அடிகளார், மற்றும் கியூடெக் பணியாளர்கள் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.



## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் 24.11.2009 மறைக்கல்வி நடுநிலையத்தில் நடாத்தப்பட்ட மனித உரிமைகளும் கடமைகளும் தொடர்பான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்கு கரித்தாஸ - கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்பணி.கி.யோ. ஜெயக்குமார் அடிகளாரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் திரு.வு. கனகராசா அவர்களும் சான்றிதழ்களை வழங்கினர்.



கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினால் 21.11.2009 பருத்தித்துறை அஞ்சலியகத்தில் அருட்தந்தை டேமியன் தலைமையில் நடாத்தப்பட்ட மீள்குடியேறிய பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கான மற்றும் சிறுவர்களுக்கான மனித உரிமைகளும் கடமைகளும் தொடர்பான ஆவணப்படுத்தல் கருத்தமர்வில் கலந்து கொண்ட பயனாளிகளைக் காண்கிறீர்கள்.





## முச்சக்கர வண்டி அன்பளிப்பு




போரினால் கால்கள் பாதிப்படைந்த பாடசாலை மாணவி ஒருவருக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் முச்சக்கர வண்டி ஒன்றினை வழங்கி உள்ளது. கரித்தாஸ் கியூடெக் நிறுவன அதிகாரி திரு.திலகரெட்ணம் அவர்கள் முச்சக்கர வண்டியை பயனாளியிடம் வழங்குவதை படத்தில் காணலாம்.

## துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு




போரினால் பாதிப்படைந்த 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவிக்கு அவரது பாடசாலைக் கல்வியை தொடர்வதற்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் துவிச்சக்கர வண்டி ஒன்றினை வழங்கி உள்ளது.

போரினால் பாதிப்படைந்த பல்கலைக் கழக மாணவருக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் துவிச்சக்கர வண்டி ஒன்றினை வழங்கி உள்ளது.

## மனித உரிமைகள் தின சுவரொட்டிப்போட்டி முடிவுகள்

**1ம் இடம்**



க.பிரசன்னா (நவாலி)

**2ம் இடம்**



யோ.காமல் (யாழ்ப்பாணம்)

**3ம் இடம்**



ச.சர்மிளா (பண்டத்தரிப்பு)

**பாராட்டுப்பெறுவோர்**



ம.துஷாந்தன் (மானிப்பாய்)



ம.கலாரஞ்சினி (இணுவில்)

"துண்டுபட்ட தனிமனிதன்அல்ல ஒன்றுபட்டு மனிதகுலம் முன்னேற வேண்டும்" (பாப்பறை 6ம்சின்னப்பர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வருக! வருக!

# அமதிகள் எங்கள் உயர் தலைவரே வருக!

## உங்கள் வரவால் நமது மாகாண குழுமமும் பணிகளும் புத்துயிர் பெறட்டும் நம் மண்ணும் மக்களும் ஆசீர் பெறட்டும்.



அமலமரித்தியாகிகள் சபையின் உயர் மேலாளர் அதிவண. வில்ஹெம் ஸ்ரெக்லங் அமதி, அவர்கள் நமது யாழ் மாகாண அமலமரித் தியாகிகளை மார்கழி 12 - 20ல் தரிசிக்கின்றார். இங்கு தங்கியிருக்கும் நாட்களில் அவர் அமலமரித்தியாகிகளின் வருடாந்த தியானத்தைப் போதிப்பதுடன் அவர்களின் பணி மையங்களையும் பார்வையிடுவார். புதிதாக நிறுவப்பட்ட சில விசேட பணி மையங்களைத் திறந்தும் வைப்பார்.



நமது உயர் மேலாளர் அவர்கள், ஏப்பிரல் 23, 1947ல் யேர்மனியில் பிறந்தார். அமல மரித்தியாகிகள் சபையில் இணைந்து 1967ல் தமது முதல் வாக்குறுதியை மேற்கொண்ட இவர் இறைவனின் குருவாக யூலை 20, 1974ல் திருநிலைப்படுத்தப்பட்டார். பல ஆண்டுகளாக பராகுவே நாட்டில் மிசனரியாகப் பணி செய்த இவர் 1986 - 1989 வரையும் பில்கோமையோ (Pilcomayo) துணைமாகாண முதல்வராகவும் பணியாற்றினார். 1992ல் இடம்பெற்ற அமதிகளின் பொது அமர்வில் குருக்கள் துறவிகளின் உருவாக்கத்துக்குப் பொறுப்பான உதவி உயர் மேலாளராகவும், 1998ல் இடம் பெற்ற பொது அமர்வில் நமது சபையின் பன்னிரெண்டாவது உயர்மேலாளராகவும் தெரிவு தெரியப்பட்டார். மீண்டும் 6 வருடங்களுக்கு 2004ம் ஆண்டு தெரிவானார்.

பன்னாட்டு ரீதியாக 164 நாடுகளில் பணிபுரிந்து வரும் 4550க்கு மேலான அமலமரித் தியாகிகளின் தலைவரான இவர், எளிமையும், பொறுமையும், இரக்கமும், ஆழ்ந்த ஆன்மீகமும் கொண்ட ஒரு ஒப்பற்ற துறவியாவார்.

ஏழைகள் மட்டில் அளவு கடந்த அக்கறையும், தமது ஒவ்வொரு தியாகியின் மேல் தனிப்பட்ட கரிசனையும் கொண்டவர். குறிப்பாக நமது மாகாணப் பணிமையங்கள் போர்ச் சூழல்களால் அழிக்கப்பட்ட போதும், பல இடப்பெயர்வுகளை சந்தித்த போதும், நமது குருக்கள் முகாம்களில் வாடிய போதும், நமது அமல அன்னை அன்பகப் புதல்வர்கள் கதிகலங்கியபோதும் நம்பிக்கையின் தூணாக, பரோபகாரத்தின் அடையாளமாக தம்மை எம்முடன் இணைத்துக் கொண்டவர். இறைவல்லமையுடன் யாவற்றையும் சாதித்து விடலாமென்ற இவரது நம்பிக்கை அபாரமானது. தூரநோக்கும், காலச் சக்கரத்தின் நெழிவு சுழிவுகளை யதார்த்தமாகப் பார்த்து முடிவெடுக்கும் ஒப்பற்ற தலைவர்.

குருத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வில் பங்குகொள்ளுமிவர், நமது ஆயரையும் குருமடங்களையும் தரிசிக்கும் அதே வேளையில், யாழ் மறைமாவட்ட குருக்கள் துறவிகளுக்காக ஒரு உரையையும் நிகழ்த்தவுள்ளார். மார்கழி 21 - 24 வரை மன்னார் மறைமாவட்டத்தை சந்திக்கும் இவர், அங்கும் அமதிகளையும், ஆயரையும் தரிசித்து குருக்கள் துறவிகளுக்கான உரையையும் நடாத்தவுள்ளார்.

பேரருள் தந்தையே, மனம் மகிழ
உங்களை நம் மண்ணுக்கு
வரவேற்கின்றோம். தீமைகள் அழிந்து
புதுவாழ்வு மலரும் ஒரு நிகழ்வாக
உங்கள் பிரசன்னம் அமையட்டும்.

*அருட்பணி ம. போல் நட்சத்திரம் அமதி*
*மாகாண முதல்வர்*
*யாழ் மாகாணம்*

## யாழ் மாகாண அ.ம.தி.களின் சில வரலாற்றுப் பதிவுகளிலிருந்து...

" பூமியிலே அழகானதொரு பணிக்களத்தை நாம் பெற்றிருக்கிறோம்.
எத்துணை பரந்த பணிக்களம் அது" - *புனித இயூஜின் டி ம.*

அன்றைய யாழ் மேற்றிராசனமாக, வடக்கே பரித்தித்துறையையும் தெற்கே குருநாகலையும், மேற்கே சிலாபத்தையும், கிழக்கே திருமலை, மட்டுநகர் என்பவற்றையும் உள்ளடக்கிய பெரும் பகுதியில், ஆயர் பெற்றக்கினி (1846-1857) அவர்களின் வழிநடத்தலில் சில ஐரோப்பிய குருக்களும், வயது முதிர்ந்த சில மகோவைக் குருக்களுமே பணி செய்து வந்தனர். இந் வடபிராந்திய மேற்றிராசனத்தில் பணிசெய்வதற்கு மேலும் பல குருக்களின் பணி தேவைப்படுவதை நன்குணர்ந்த ஆயரவர்கள் பிரான்சின் மார்செயிக்கு வந்தார். ஏழைகள் மட்டில் மிகுந்த அர்ப்பணிப்போடு பணியாற்றிக் கொண்டிருந்த அமல மரித்தியாகிகளின் தலைவரான ஆயர் இயுஜினைப் பற்றி அறிந்து அவரிடம் உதவிகோரினார். எனவே "ஏழைகள்"என்ற வார்த்தை கேட்டதும் மனமகிழ்வோடு தமது துறவிகளை அனுப்பி வைக்க சம்மதம் தெருவித்தார்.

தலைவனது வார்த்தைகேட்டு அமல மரித்தியாகி அருட்தந்தை செமரியா (1812-1868) தலைமையில், அருட்தந்தையர்களான லூயிஸ் கீற்றிங், யோசேவ் அலெக்ஸாண்டர் சியமின், அருட்சகோதரர் கஸ்பாட் டீ ஸ்ரெபானிஸ் என்பவர்கள் 21.10.1847 இல் மார்செயிலிருந்து புறப்பட்டு , 37 நாட்கள் கடற்பயணத்தின் பின்னர் 28.11.1847அன்று காலி துறை முகத்தில் தரையிறங்கினர்.

1948 ஆம் ஆண்டின் தொடக்க காலப் பகுதியில் இலங்கை பணித்தளமானது வட பிராந்தியம், தென்பிராந்தியம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அந்த வகையிலே 17.02.1948 இல் யாழ்ப்பாணமும் அதனை சேர்ந்த மேற்றாசனத்திற்கு உரிய பகுதிகளும் அமல மரித்தியாகிகளின் பணித்தளங்களாக பொறுப்பேற்கப்பட்டன. பல்வேறு இன்னல்கள் இடையூறுகள் மத்தியிலும் தளராது பணிசெய்த துறவிகள் பலர் அந்தந்த பணித்தளங்களிலேயே மரணத்தை சந்தித்துக் கொண்டார்கள். போய்வருகிறோம் என்று கையசைத்து வந்தவர்கள் இறுதிவரை தங்கள் இடங்களுக்கு செல்லாது இம்மண்ணிலேயே விதைக்கப்பட்டார்கள். மலேரியா, வயிற் றோட்டம் (கொலரா), சின்னம்மை போன்ற பல நோய்களையும் இவர்கள் தமது உடலில் தாங்கியவர்களாக பணிதொடர்ந்தார்கள். மொழிகளைப் படிப்பதன் மூலம் தங்கள் பணிகளை மேலும் வீரியமாக ஆற்ற எண்ணியவர்கள் தமிழ், சிங்களம் ஆங்கில மொழிகளை படிப்படியாகக் கற்றுக்கொண்டார்கள். அப்பணிகளின் முக்கிய தடங்களையும், குறிப் பிடப் படவேண்டிய பல விடயங்களையும் நோக்குகின்ற போது,

*12.05.1849 அன்று மேலும் மூன்று தியாகிகளைக் கொண்ட குழுவொன்று பணிக்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

* 1850 இல் 'ஆண்கள் செபினறி' என்ற பெயருடன புனித பத்திரிசியார் கல்லூரி எழுந்தது. இதன் முதல் முகாமையாளராக அருட்தந்தை மௌறோ அமதி நியமிக்கப்பட்டார்.

*04.06.1851 அருட் தந்தை செமரியா்.அமதி யாழ் குருமுதல்வராக நியமிக்கப்பட்டார்.

*16.06.1851 கொலரா நோயின் பீடிப்பால் அருட்தந்தை லெய்டியர் அமதி யாழ்ப்பாணம், வதிரியில் மரணமானார். இவரே யாழ் மண்ணில் மரணித்த முதலாவது அமதியாவார்.

*25.07.1851 முதல் மகாஞானவொடுக்கம் ஊர்காவற்துறை, யாழ்ப்பாணப்பங்குகளில் ஆரம்பிக்கப்பட்டது.

*07.02.1855 கொலரா, சின்னம்மை போன்ற நோய்கள் யாழ் குடாநாடு எங்கும் பரவியதால், மக்கள் பெரிதும் துன்பப்பட்டார்கள். எனவே யாழ் பேராலயத்தில் அமல உற்பவ அன்னையின் பெயரில் விசேட வழிபாடுகள் செய்யப்பட்டு அற்புதமான முறையில் பலர் காப்பாற்றப்பட்டார்கள்.

*10.11.1859 திருக்குடும்பக் கன்னியர் சபைக் குழுவினரை அமல மரித்தியாகிகள் சபையினர் யாழ்ப்பாணம் கூட்டிவந்தனர்.



(1984 - 1991)



(1991 - 1997)



(1997 - 1998)



(1999 - 2005)



(2005 - 2008)



(2008 - )

*1864 இல் சுதேச துறவற சபையான புனித வளனார் சகோதரர் சபை கிறிஸ்தோபர் ஏர்னஸ்ற் பொஞ்சீன் அடிகளாரால் நிறுவப்பட்டது.

*1876 இல் சுதேச அமதி குருவாக, யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த சாண்றா திருநிலைப் படுத்தப்பட்டார்.

*10.03.1949 யாழ் மறைமாவட்ட முதற் தமிழ் ஆயராக மேதகு எமிலியானுஸ்பிள்ளை. அமதி நியமிக்கப்பட்டார்.

*28.06.1961 மாகாண உப பிரிவாக வட மாநிலம் ஏற்படுத்தப்பட்டது. (Provincial Delegation)

*08.12.1984 அன்று வட மாநிலம் தனிநிர்வாக அலகாகப் பிரகடனப்படுத்தப் பட்டது (General Delegation).

*23.08.1989 அன்று வட மாநிலம் தனிமாகாணமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. (Vice Province of Jaffna)

*12.07.2001 யாழ் மாகாணம் ஒரு தனி அலகாகப் பிரிந்து வட பகுதியில், குறிப்பாக வட பிராந்தியத்தில் வாழ்ந்த கைவிடப்பட்ட ஏழை மக்களுக்கான காலத்தின் தேவைகளையும், பணியின் பல்லுருவக் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படத் தொடங்கியது. இதுவரை கொழும்பு மாகாணத்தின் உப பிரிவாக செயற்பட்டு வந்த வடபகுதி அமரமரித்தியாகிகள் தமக் கேயுரிய விதத்தில் பல கட்டுமானங்களை மேற்கொண்டனர். இற்றைவரை ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதற்காக பல துறவிகளை பெற்றெடுத்து பணிக்கு அனுப்பும் யாழ் மாகாணம் புனித இயூஜினின் பரிந்துரையில் அருள்பெற்று என்றும் மிளிரட்டும்.

வட மாநிலம் தனி நிர்வாக அலகாகப் பிரகடனப் படுத்தப்பட்டதிலிருந்து இற்றைவரை எமது மாகாணத்தின் தலைமைத்துவ பொறுப் பேற்று பணிபுரிந்தவர்களாக அருட்தந்தை லூயிஸ் பொன்னையா அமதி, அருட்தந்தை பி.பி.பிலிப். அமதி, அருட்தந்தை பி.யேசுநேசன். அமதி, அருட்தந்தை ஜீவேந்திரா போல் அமதி, அருட்தந்தை செல்வரடணம் அமதி, தற்போதய மாகாண முதல்வர் அருட்தந்தை போல் நட்சத்திரம் அமதி ஆகியோர் அடங்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமலமரித்தியாகிகளின் உயர் மேலாளர் அதிவண. வில்ஹெம் ஸ்ரெக்கிலிங்

*- ஓர் கண்ணோட்டம் -*

✱ 1947ம் ஆண்டு சித்திரை மாதம் 23ம் திகதி ஜேர்மனியில் படவோன் என்னும் மறைமாவட்டத்தில் வேல் என்னும் இடத்தில் பிறந்தார்.

✱ அமலமரித்தியாகிகளினால் மேற்கொள்ளப்பட்ட மேய்ப்பு பணியின்போது சபையை பற்றி அறிந்துகொண்டார்.

✱ இரண்டாம் நிலை கல்வியை முடித்துக்கொண்டு சிறிய குருமடம் புகுந்தார். பின்னர் 1967ம் ஆண்டு முதல் அர்ப்பணத்தை செய்துகொண்டார்.

✱ இறையியல் கல்வியை பூர்த்திசெய்துகொண்டு 1973ம் ஆண்டு தனது இறுதி அர்ப்பணத்தை துணிவுடன் மேற்கொண்டார்.

✱ 1974ல் தன்னுடைய சொந்த இடத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

✱ 1974ம் ஆண்டு புதிய குரு புதிய பணிக்களமாகிய பராகுவே நோக்கி புறப்பட்டார்.

✱ 1986-1989 வரையும் பில்கோமையோவின் துணைமாகாண முதல்வராக பணியாற்றினார்.

✱ தன்னுடைய பணியை வெற்றிகரமாக முடித்து கொண்டு உருவாக்கல் பணியில் கால் பதிக்க ஆரம்ப நவசந்நியாச மடத்தை பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

✱ 1992ம் ஆண்டு இடம்பெற்றஅமதிகளின் பொது அமர்வில் குருக்கள் துறவிகளின் உருவாக்கத்துக்கு பொறுப்பான உதவி உயர் மேலாளராக தெரிவுசெய்யப்பட்டார்.

✱ 1998ம் ஆண்டு இடம் பெற்ற பொது அமர்வில் அமலமரித்தியாகிகளின் சபையில் பன்னிரெண்டாவது உயர் மேலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

✱ முதலாவது தவணையை நிறைவு செய்து கொணடு 2004ல் ஆண்டு நடைபெற்ற பொது அமர்வில் சபையின் உயர் மேலாளராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

### அ.ம.தி 2009 வரை உலகில்!!

| | |
|---|---|
| கருதினால் | -01 |
| பேராயர்கள் | -10 |
| அப்போஸ்தலிக்க முதல்வர்கள் | -02 |
| குருக்கள் | -3095 |
| அருட்சகோதரர்கள் | -407 |
| குருமட மாணவர்கள் | -698 |
| ஆயர்கள் | -31 |
| மொத்தம் | -4244 |
| பணிக்களங்கள் (நாடுகள்) | -68 |

### யாழ். அ.ம.தி. குடும்பம் 2009 இல்...

| | |
|---|---|
| அருட்தந்தையர்கள் | - 74 |
| திருத்தொண்டர்களாக | - 06 |
| அருட் சகோதரர்கள் | - 01 |
| குருமட மாணவர்கள் | - 19 |
| நவ சந்நியாசத்தில் | - 06 |
| சந்நியாச வாழ்வில் | - 04 |
| மெய்யியல் கல்வியில் | - 06 |
| இறையியல் கல்வியில் | - 24 |

## *ஏழைகளின் பிரியனே வருக!*

புரட்சிப் புழுதியில்
புலர்ந்த புனிதர்
இயூஜின் பணியில்
பாதம் பதித்து
அமதிகளின் அகில
தலைவராய் - தன்
பணியாளர் பணி
பகிர...

புலராத பொழுதுகள்
விடியாத இரவுகள்
முடியாத கனவுகள்
முடியாது தொடஉந்து
மடியும் மண்வந்த
மா மனிதனே...

உன் வரவால்
உதிக்கிறது
நம்பிக்கையின் - கீற்று
நம்மிடையே
புலர்கிறது
மனங்களில்
தியாக சேவையின்
தேவை
துளிர்க்கிறது
திரியாக ஒளிகொடுக்க
எம் இதயம்
என்நாளும்...

வட மாநிலம் மீது
விடாபற்றுவைத்து
இரத்தம்
தோய்ந்த - எம்
நாடெங்கும் - உம்மை
வருக வருக வென
வரவேற்கிறது
போரின் வடு
தாங்கும்
மக்களோடு
வடமாநில அமதிகள்
குழுமம் மகிழ்வோடு

## உயர் மேலாளரே!

## வாழ்த்துகிறோம்

அமலமரிமைந்தர் சேவைதனில் என்றும்
ஊக்கமுடன் உழைத்திடும் உத்தமரே
நோக்குமுயர் நற்பணிகள் நிறைவுடனே செய்திடும்
அன்பு நிறை...

சிந்தையிலே சபை வளர்ச்சிதனை யென்றும்
நோக்கமாகக் கொண்டமைத்த நிறைமகனே
தேக்கமில் நின் சேவை தொடர்ந்திடவே இம் மண்ணில்
மரிமைந்தன் மலர்பாதம் பணிந்தோமே ஒன்றாய்...

அமலமரி சபை தன்னை அகிலமெங்கும் வளர்த்திட
ஆக்கமுயர் முதல்வரே பரந்திடுக நின்பணி
நித்தமும் சபையின் நிறைவுயர் வளர்ச்சிக்கு
உத்தமரே உயரிய நற் சேவை செய்தீர்...


உறவொன்று இல்லாமல் உயிரோடு வாழுள்ளம -உன்
நிலையான உறவாலே சுகம் காணுதே
சத்தியத்தின் வழி நின்ற சீருயர் முதல்வரே
ஜெகத்தினில் என்றும் சிறப்புடன் வாழியவே...

நீ சென்ற பாதைகள் நீ செய்த தியாகங்கள்-உன்
அருள் பெற்ற உள்ளத்தில் வாழ்வானதே
இந்த உன் அருட்பணியில் என்றும் வாழ்த்திட
இறையருள் காத்திட வாழியவே...

உன் புன்னகையும் உள்ளன்பு வார்த்தைகளும்
உறவையே வளர்த்திடும் உலகிற்கே உயிர் கொடுக்கும்
இது தொடர் கதையாய் உந்தன் அனுபவமாய் வர
அன்புள்ளம் கொண்டு வாழ்த்துகின்றோம்...

விருப்புடனே யாவரும் வியந்து போற்றும்
வித்தகனாய் மிளிர்த்திடும் ஒளி முதலே
உன் வாழ்வு தந்து பணிசெய்யும் நற்குருவே
பூவைப் போல் இப்பாரில் நறுமணம் வீசிட வாழியவே...

பெருமகனாய் நின்று பேரொளியைப் பரப்பிய
பேறுயர் குருவே பெருகட்டும் நின் சேவை -என
வாழ்த்தி நிற்கின்றோம் உன்
பணியின் மகிமையினாலே.




### அமதிகளுடன் இணைந்து பணியாற்றும் பொதுநிலையினர் (MAMI.)

இது திருத்தந்தையின் அனுமதி பெற்ற அமல அன்னையின் மறைபரப்பு சபை; இவர்கள் பொதுநிலையினராக அமதிகள் குடும்பத்துடன் இணைந்து செயற்படுகிறார்கள்.

**இவர்களின் பணிகளில் சில...**

* தியாகிகளின் பணியினை செபத்தாலும் ஒத்துழைப்பாலும் சிறப்பித்தல்.

* தியாகிகளின் குழு மத்தியில் தேவ அழைத்தல் பெருக வழிசெய்தல்.

* தியாகிகளின் பயிற்சிக்காக செபங்கள், தியாகங்கள், பண உதவிகளை தாராள மனதுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

* அனுதின மன்றாட்டில் தியாகிகள் பெருகவும், பாவிகள் மனந்திரும்பவும் வேண்டுதல்.

### விளைந்த பயிரும், துளிர்விடும் தளிரும் - ஓர் சந்திப்பு -




**இளைஞனே உன்னையும் இறைவன் அழைக்கிறார்! அ.ம.தியாக மாறி இறைபணியில் இணைந்திடு!**

தொடர்புகளுக்கு:

அதிபர்,
புனித வளனார் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

அருட்தந்தை. விமல். அமதி.
'அமதி அகம்'
26, குட்செட் வீதி,
வவுனியா.

பங்குத்தந்தை,
புனித வனத்துச் சின்னப்பர்ஆலயம்,
அப்புத்தளை.

- அமதி இறையியலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருக்கள் ஆண்டு
# ஜூன் 2009 - ஜூன் 2010



## பணி வாழ்வு

குருக்கள் ஆண்டில் எம் குருக்களின் பணிகளை நன்றியோடு நினைவு கூர்கின்றோம்.

எமது மண்ணில் பல்வேறு துன்பங்கள் மத்தியிலும், தன்னலமற்ற சேவை புரிந்த குருக்களையும், குறிப்பாக 1987ம் ஆண்டு காலப் பகுதியில் வடமராட்சி மண்ணில் போர்ச் சூழலில் இடம்பெயர்ந்த மக்களை ஆதரித்து, அவர்களுக்கு உணவு கொடுத்து, இறந்தவர்களை குண்டுவீச்சுக்கள், செல்லெறிகள் மத்தியிலும் நல்லடக்கம் செய்து, மக்கள் இடம் பெயர்ந்து சென்ற பின்பும் வீடுகளில் எஞ்சியிருந்த முதியோருக்கு ஆறுதல் கூறி, தம்மாலியன்ற உதவிகள் புரிந்த எம் அருட்தந்தையர்களை நன்றியோடு நினைவு கூர்கிறோம்.

வன்னி மண்ணில் போர்ச்சூழலுக்கு முற்பட்ட காலத்தில் ஒரு பங்குத்தந்தை 12 ஆலயங்களிற்கு பணியாற்றிய காலமும் உண்டு. பங்குத்தந்தை சனிக்கிழமை தொடக்கம் ஞாயிறு மாலை வரை ஞாயிறு திருப்பலி ஒப்புக் கொடுப்பார். கஸ்ரப் பிரதேசம், சில வேளைகளில் அவர்களின் மோட்டார் சயிக்கிள் இடைநடுவில் நின்று விட்டால் எமக்கு அன்று திருப்பலி இருக்காது. அடுத்த ஞாயிறு அருட்தந்தை வந்து கேட்பார், ''மோட்டார் சயிக்கிள் பிழைத்து வழியில் நின்றேன், யாராவது வந்து பார்த்தீர்களா?" என்று

வன்னியில் மக்களை அடிக்கடி வருத்தும் 'மலேரியா' எம் அருட்தந்தையர்களையும் விட்டு வைப்பதில்லை. "Father க்கு காய்ச்சல், பூசை வைக்க வரமாட்டார்" என்ற தகவல் பல தடவைகளில் எமக்கு கிடைக்கும்.

இப்படியான கஸ்ரமான நிலைமைகளிலும் கூட, பங்கின் பணிகளை குறைவற நிறைவேற்றி, பங்கு மக்கள் ஒவ்வொருவரினதும் பிரச்சனைகளை கேட்டறிந்து உதவி புரிந்தும், பங்குகளில் குடும்பங்கள் குறைவாக இருந்தாலும், பங்குத்தந்தை ஒழுங்கான தாபரிப்பின்றி பற்றாக் குறையோடு இருந்தாலும், பங்குப் பணிகளை திருப்தியுடன் நிறைவேற்றி, பங்கு மறைக்கல்வி, முதல் நன்மை, உறுதிப்பூசுதல் உதவி புரிந்து, பல்வேறு இடப்பெயர்வுகளையும் சந்தித்த மக்களுக்கு உணவு, உறைவிடம் கொடுத்து ஆறுதலளித்த அருட்தந்தையர்களை நினைவு கூர்கிறோம்.

''செல்லுங்கள் உலகெங்கும், சொல்லுங்கள் நற்செய்தி" என்ற ஆண்டவர் இயேசுவின் அழைப்பிற்கு தம்மை முற்று முழுதாக கையளித்து எமக்கு அன்புப் பணிபுரியும் குருக்களுடன் இறைவன் உடனிருந்து, அவர்களை உறுதிப்படுத்தி அவர்கள் பணி வாழ்வில் ஏற்படும் போராட்டங்கள் மத்தியில் அவர்களை பாதுகாத்து வழி நடத்தவும் எமது பங்குகளிலிருந்தும் இறைவனின் அழைத்தலிற்கு செவிமடுத்து அன்புப் பணிபுரிய, இறைவன் தாமே பலரைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் அறுவடையின் ஆண்டவரை அனுதினமும் வேண்டுகின்றோம்.

**அ. யஸ்மின், கரவெட்டி.**

## குருக்களே நீங்கள் பேறுபெற்றவர்கள்

மூவொரு இறைவனின்
திராட்சைத் தோட்டமதில்
இறைபணி புரியும்
ஆண்டவன் குருக்களே
நீங்கள் பேறுபெற்றவர்கள்

உணவோடு கரையும்
காரமுள்ள உப்பைப்போல்
மக்களின் வாழ்வுக்காய்
கரைந்து அழிகின்றீர்கள்
நீங்கள் பேறுபெற்றவர்கள்

திருமறையை வளர்ப்பதற்கு
அனைத்தையும் துறந்து
புளிக்காரம் போலிருந்து
பணிகளைச் செய்கின்றீர்கள்
நீங்கள் பேறுபெற்றவர்கள்

இறைபணியில் இமயமாய்
பிறர்பணியில் சிகரமாய்
கத்தோலிக்க திருமறையில்
இன்னுமொரு கிறிஸ்துவாய்...
நீங்கள் பேறுபெற்றவர்கள்

இ. அ. அமலரட்ணம்
யாழ்ப்பாணம்.

## மாசில்லாக் குருவே

ஆழமான பணியில்.
அரும்பணியாற்றும் அருட்பணியோர்க்கு!
ஆயிரம் நன்றி;
மாமரி மைந்தனின்.
மாசில்லாப் பணியை.
மனமகிழ்வோடு.
குறை வறச்செய்யும்,
குரு இவர்க்கென்றும் - எம்.
குவலயம் சேரும்.
அன்பின் உருவாய்,
ஆற்றிடும் பணியால்.
அருட்திரு ஆவியை பெற்றிடுவீரே!
எளியோர்க்கு.
ஏணியாய் உழைத்திடும் - நீரே.
ஏதிலி வாழ்வில்.
எரி திரி மெழுகே,
பாவிகள் பாவத்தை.
பரமனண்டை சேர்த்திடும் - உமது.
பாதத்தை கழுவ.
பரிமள நீரால்.
பணிந்திடுவோமே!

மைந்தனின் பணியை,
மகிழ்வுறச் செய்யும்.
சிந்தை நிறை,
சேவகன் நீயே.
மந்தைகள் எம்மை,
மாண்புடன் மேய்த்து.
மன மகிழ்வீரே.
மாசில்லாக் குருவே!

கில்டா - ஜெயதீசர்
பேக்கரி லேன்,
யாழ்ப்பாணம்.

## அவதரித்த குருக்களே

அருட்பணியாளர்களாக - தேவன்
ஆலயங்கள் வளமுற
இங்கிதமாக சேவை செய்து
ஈசன் வழி சமைத்திட
உள, உடல் உறுதி பெற்று
ஊர் ஊராய்ச் சென்று
எள்ளளவும் அஞ்சாமல்
ஏற்றமே கண்ணாக - பணியில்
ஐயம் ஏதும் இல்லாது
ஒன்றே கடவுள் வழியென
ஒராயிரம் வழியில் உரைத்து
ஒளடதமாய் ஆன்ம நோய்க்கு
அவதரித்த குருக்களே வாழ்க

**சில்லையூர் ரமணி**

## குருத்துவமே நீ என்றும் மகத்துவமே

ஓ குருத்துவமே! நீ என்றும் மகத்துவமே - உன்னில்
வாழும் குருக்களின் வாழ்வே ஓர் தனித்துவமே

கண்ணெதிரே கடவுளைக் கண்டேன் என்றால்
மறுக்கின்ற உலகம் இது
கண்ணாலே பேயைக் கண்டேன் என்றால்
மயங்கி வீழ்கின்ற உலகம் இது
கண்ணியமாய் உம் பணிதனை ஆற்றிடுவீா்
கன்னமிட விடாதீர் உம் கடமைதனை

முட்களின் மேலே நடந்து பூப்பறிக்கும் காலமிது
உம் முகத்தில் நல் புன்னகையால் நற்செய்தியை
விதைத்து - உலகம் போற்ற உம் பணிதனை ஆற்றிடுவீர்
மாந்தர் தனை விண்ணக மாட்சி பெற அழைத்திடுவீர்
உம் தனித்துவம் தனை தாங்கி நின்று
மகத்துவம் தனை காண உம் குருத்துவத்தை
இனிதே வாழ்ந்திடுவீர் - எம் இனிய குருக்களே!

**M.M. ஜெயந்தா**

## ஆன்ம உணவாண்டவர் உறவு

**- அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் -**

**சென்ற வாரத் தொடர்ச்சி...**



**8. சோம்பல்:**

பாவத்தைப் பிறப்பிக்கின்ற ஏழு முக்கிய காரணிகள் எனத் திருச்சபை கூறுவனவற்றில் சோம்பலும் ஒன்று. சோம்பலுக்கு இடம்கொடுப்போர், ஆன்ம உணவாண்டவர் பிரசன்னத்தில் கழிக்கும் ஆவல் மனதில் தோன்றும்போது "பின்னேரம் போவம், நாளைக்குப் போவம்" எனப் பின் போட்டு இறுதியாக அவர் பிரசன்னத்தை மறக்கும் நிலையே உருவாகின்றது.

### ஆன்ம உணவாண்டவரின் அன்புக் கொடைகள்

மனப்பராக்குகள் கலைந்து மனம் ஆன்ம உணவாண்டவரில் ஒன்றித்து உறவாடும்போது எண்ணிலடங்கா நன்மைகள் பல கிடைக்கின்றன. அவற்றுள் பல வார்த்தைகளைக் கடந்தவையெனினும் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

1. **அன்புப் பிணைப்பு:** ஆன்ம உணவாண்டவரோடு நம் வாழ்வைப் பகிர்வதைப் பழக்கமாக்கிக் கொள்ளும்போது படிப்படியாக அவருக்கும் எமக்குமிடையே ஒரு ஆளுறவுத் தன்மைகொண்ட அன்புப் பிணைப்பு உருவாகத் தொடங்குகின்றது. அப்பிணைப்பானது அவரது பிரசன்னத்தை மகிழ்வோடு அடிக்கடி நாடவைக்கின்றது. அவரது பிரசன்னத்தில் கழிக்காத நேரம் வறண்ட காலமாக அமைகின்றது. இவ்வனுபவமானது அவர் எமக்கு அருகிலிருக்கின்றார், எம் வாழ்வின் பிரிக்க முடியாத ஒரு ஆள் அவர் என்கின்ற ஆழமான உணர்வை ஏற்படுத்துகின்றது.

2. **பாவமாசு வெளிப்படலும் விடுதலையாதலும்:**

இதனையே இயேசு "உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்தே செய்கின்றார்கள் என்பது வெளியாகும்" என கூறினார் (யோவா. 3::21). ஒளியின் முன்னே மாசுகள் வெளிப்படுவதுபோல ஆன்ம உணவாண்டவர் பிரசன்னத்தில் நம் பாவ மாசுகள் படிப்படியாகத் தெளிவாகத் தோன்றத் தொடங்குகின்றன. அவற்றிற்கான காரணிகள், அவற்றிலிருந்து விடுபட்டுப் புதுவாழ்வு வாழும் வழிகள் அவரால் படிப்படியாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதனால் எம் ஆன்மா விரும்பும் விடுதலை வாழ்வு கிட்டும். அவரே அத்தகைய ஒரு விடுதலையைத் தரவல்லவர். "மகன் உங்களுக்கு விடுதலையளித்தால் நீங்கள் உண்மையில் விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள் (யோவா.8:36).

3. **குணமாகல்:** நம் துன்பத்துக்குக் காரணமான உறவுக் காயங்களை ஆன்ம உணவாண்டவருக்கு வெளிப்படுத்தும்போது நம்மைத் தொட்டுக் குணமாக்கி நாம் ஏங்கும் மகிழ்வும் நிம்மதியும் நிறைந்த வாழ்வினை நமக்கு அருள்கின்றார். வேதனை, இழப்பு அனுபவங்களை பகிர்ந்து ஒப்புக்கொடுத்து அவை நம் வாழ்வுக்குக் கற்றுக்கொடுக்க முயலும் பாடங்களை அடையாளம் காணப் பழகிக்கொண்டால், மனக்காயங்கள் அவரின் பிரசன்னத்தில் குணமாகும். அவரே அவற்றைத் தொட்டுக் குணமாக்குவார்.

4. **நிம்மதி வாழ்வு:** நாம் நிம்மதி இழந்து தவிக்கும்போது ஆன்ம உணவாண்டவருடன் பகிர்ந்துகொள்ளும்போது நம் வேதனைக் கதைகளுக்கு கருத்தோடு செவி சாய்க்கின்றார். பின்னர் மனப்பாரங்களைக் குறைத்து உலகம் தரமுடியாத ஒரு ஆழமான இதய அமைதியையும் மன நிம்மதியையும் தருகின்றார். "நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்."(யோவான் 14:1) என்ற அவரின் அழைப்பைக் கேட்டு நிம்மதி பெற முடியும்.

5. **உள்ளத் தெளிவு :** "உண்மையை அறிந்தவர்களாய் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவா. 3:22). என இயேசு கூறியது பல ஆழமான உண்மைகளைக் கொண்டது. நாம் வாழ்வில் பல்வேறு வகையான குழப்ப அனுபவங்களுக்கு உள்ளாகி மனம் அலைந்து தவிக்கும்போது அவர் பிரசன்னத்தில் வந்து அவரோடு எமது அனுபவத்தைப் பகிர்கையில் அவற்றைப் புரிந்துணர்வோடு கேட்டு, நமக்கு மனத் தெளிவையும் பாதைக்கு வெளிச்சத்தையும் அருள்கின்றார். "உலகின் ஒளி நானே. என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" (யோவான் 8:12).

6. **இறைவிருப்ப வெளிப்பாடு:** எமது வாழக்கை முறை, உறவாடும் முறைகள், நடத்தைக் கோலங்கள், இறைவனின் விருப்பப்படி அமைந்திருக்கின்றதா அல்லது சரியான பாதையில்போகின்றதா என்று அறியாது கலங்கும்போது, போகவேண்டிய பாதை தெளிவற்றதாக இருக்கின்றபோது அவரது ஞானம் நிறைந்த பிரசன்னம் எமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக அமைகின்றது. "நான் என்ன செய்ய வேண்டும் என்று நீர் விரும்புகின்றீர் என்று ஆன்மாவும் இதயமும் ஏங்கிக் கலங்கும்போது "இந்தப் பாதையால் செல்" என்று சுட்டிக்காட்டுகின்றவராக ஆன்ம உணவாண்டவர் விளங்குகின்றார். "உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்தே செய்கிறார் என்பது வெளியாகும்"(யோவா.3:21).

**முடிவுரை:** ஆன்ம உணவாண்டவர் பிரசன்னத்தில் மகிழ்ந்திருப்பதில் படிப்படியாகவே பழக்கப்பட முடியும். மனம் திடீரெனப் பாராக்குகளின்றியிருக்கக் கற்றுக்கொள்வதில்லை. எனவே ஒவ்வொருநாளும் அவர் பிரசன்னத்தில் இருந்து உறவாடுவதை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு அவர் தரும் ஆழ்ந்த முத்துக்களை, வசந்தகங்களை அனுபவிக்க வரம் தருமாறு நாம் அடிக்கடி செபிப்பது நல்லது. தமது பிரசன்னத்திற்கு நம்மை அழைப்பது அவரின் அருள்செயலிலேயே தங்கிருக்கின்றதெனினும் இதற்கான நமது ஆவல், முயற்சி என்பன ஆன்ம உணவாண்டவரால் ஆசீர்வதிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படத் திறனாய்வு

## 'அந்தோனி யார்?'

சமூகத் தொடர்பு ஆணையம்
யாழ் மறைமாவட்டம்

கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல் நிலத்தையும், அந்நிலத்து மக்களின் வாழ்க்கை முறைகளையும் மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள திரைப்படம் 'அந்தோனி யார்?' அதுவும் நெய்தல் நில கத்தோலிக்க தமிழ் நாட்டுக்கிராமம் ஒன்றை தத்துருபமாக வெளிக்கொணர்வதில் இயக்குனர் சி.டி. பாண்டி வெற்றி பெற்றிருக்கிறார் எனலாம். கரையோர ஏழை மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் மிகவும் சிறப்பாக வெளிக்காட்டப்படுகின்றன. வர்த்தக நோக்கையும், திரையுலகில் முன்னிடத்தை பெறுவதை மையப்படுத்தியும் போட்டி போட்டுக் கொண்டு பல திரைப்படங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் இத்திரைப்படம் சற்று மாறுபட்டிருக்கின்றது.

கடற்கரையோரம் அமைந்துள்ள அந்தோனியார் தேவாலயத்தின் பங்குத்தந்தை ஒரு அநாதைச் சிறுவனை தத்தெடுத்து வளர்க்கின்றார். அவனுடைய பெயர் அந்தோனி (ஷாம்). அந்தோனி ஆலயப்பணிகளில் பங்கெடுப்பது மட்டுமன்றி அவ்வூர் மக்களின் இன்ப துன்பங்களில் இரண்டறக்கலந்து அவர்களின் செல்லப்பிள்ளையாக மாறி வாழ்ந்து வருகின்றான். அம்மக்களுக்கு படகுகளை பாவனைக்கு வழங்கி, அவர்களின் மீன்பாட்டை சுரண்டி வாழுகின்ற முதலாளித்துவத்தின் சின்னமான மைக்கல் என்னும் தாதாவுடைய கொடுமையை தட்டிக்கேட்க ஆரம்பிக்கும் அந்தோனி பலத்த எதிர்ப்பை எதிர்கொள்கிறான். அவ்வூரின் செல்வந்தர் ஒருவர் பங்குத்தந்தைக்கும், அம்மக்களுக்கும், ஆலயத்திற்கும் பல வழிகளில் உதவி வருகின்றார். அவருடைய சகோதரி மல்லிகா (கபூர்) நகரில் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றாள். அவள் தன்னுடைய பட்டத்திற்கான ஆய்வை மீனவத் துறையில் செய்வதற்காக அவ்வூரிற்கு வருகின்றாள். அவளுக்கு போதிய விளக்கங்களை கொடுக்கவும் உதவிகளை செய்யவும் மீன்பிடியில் சகலதும் அறிந்த அந்தோனி பங்குத்தந்தையால் நியமிக்கப்படுகின்றான். அந்தோனியின் சாதுரியம், கருணை உள்ளம், ஏழை மக்கள் மேல் கொண்டுள்ள அன்பு, தொழில் புரியும் திறன், கதாநாயகியின் கேள்விகளுக்கு அவன் விளக்கமளிக்கும் ஆற்றல் இவை போன்றவற்றால் நாயகி அவன்மேல் ஒரு தலைக் காதல் கொள்கின்றாள். நாயகியின் காதல் விவகாரம் அவளது அண்ணனுக்கு தெரிந்து போக அவன் பங்குக்குருவை எச்சரிக்கிறான். இதனால் பங்குத்தந்தை அந்தோனியை அவ்வாலயத்தில் ஈடுபாடும் நற்பண்பும் கொண்ட மரியா என்கின்ற பெண்ணை மணக்கும்படி கட்டாயப்படுத்துகின்றார்.

நடுநிசியில் ஒரு ஏழைக்குடும்பத்தின் பசிபோக்கவென தொழிலுக்கு செல்லும் வேளையில் அந்தோனி, மைக்கலின் ஆட்களால் தாக்கப்பட்டு கடலில் போடப்பட்டார் அந்தோனியைக் காணாததால் அந்த ஊரே திரண்டு அசபம் செய்கிறது புனித அந்தோனியாரின் அருள் அந்தோனிக்குக் கிடைக்க அவன் புதுமையாக மீண்டும் அவன் தன் மக்களோடு இணைந்து கொள்கிறான் கதாநாயகி தன் காதலை வெளிப்படுத்திய போதுஅமைதியாக புரிந்துணர்வுடன் கேட்டு விடயங்களை தெளிவுபடுத்தி அவளுக்குள் ஒரு வழியைக்காட்டி விடுகின்றான். மைக்கலுக்கு என்ன நடந்தது? அந்தோனியின் எதிர்காலம் எப்படி அமைந்தது? போன்ற வினாக்களுக்கு ஜனரஞ்சக ரசிகர்களுக்கு திருப்தி ஏற்படாத வகையிலேயே திரைப்படம் நிறைவு பெறுகின்றது. புனித அந்தோனியாரின் மேலுள்ள பக்தியும் பயமும் இத்திரைப்படம் எங்கும் விரவியிருப்பதை காணலாம்.

இப்படத்திலும் வழமை போல காதல் காட்சிகள் வந்து போனாலும், சங்கத்தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதியான ஒருதலைக்காதல் வெளிக்கொணரப்படுகிறது. கதாநாயகன் தனது தனிப்பட்ட இன்பம், காதல் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் செலுத்தாது தான் வாழும் சமுதாய மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி, ஊழல்களுக்கு குரல் கொடுக்கும் பாத்திரமாகவே காட்டப்படுகிறார்.

இவ்வாறாக ஒரு நெய்தல் களத்தில் நடக்கின்ற நடப்புக்கள், மீனவர்களின் வாழ்க்கை முறைகள், அவர்களுக்கிடையில் ஏற்படுகின்ற தொழில் தகராறுகள் போன்றவைகள் சித்திரிக்கப்பட்டாலும் இப்படத்தை புதியதொரு படைப்பென்றோ அல்லது வித்தியாசமான கதையமைப்புள்ளதென்றோ கூறமுடியாது. மீனவர்களின் வாழ்க்கை முறையை காட்டினாலும் முற்றுமுழுதாக யதார்த்தமான சினிமா என கூறமுடியாது. வழமையான சினிமாப்பாணியே மேலோங்கி நின்றாலும், பெரிய அளவில் ஆபாச காட்சிகளைக் குறைத்து, சில சண்டைக்காட்சிகளுடன் விறுவிறுப்பாக படத்தை நகர்த்திச் செல்வது இயக்குனரின் திறமையை ஓரளவு வெளிப்படுத்தி நிற்கின்றது எனலாம்.

நெய்தல் நிலத்துக்கேயுரிய காட்சிகளை ஓர் அலையின் பாய்ச்சலைப் போல புத்துணர்ச்சியுடன் பதிவு செய்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் சான்டோனியா. 'இயற்கை' படத்திற்குப் பிறகு நெய்தல் நில கதைக்களம் ஒன்றில் ஷாம் தம் திறமையைக் காட்டியுள்ளார்.

# வள(னா)ர் பப்பா பதில்கள்

**1. கேள்வி :- அன்புள்ள வளனாரே, திருப்பீடங்களில் குருக்கள், பாதணிகளுடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கிறார்களே! இது முறையானதா?**

**ரூ. றூபி, சாவகச்சேரி.**

பதில் :- வெளிநாடுகளில், பொதுவாக சப்பாத்து [பாதணி] அணியாமல் குருக்கள் பீடத்தில் ஏறுவதில்லை. திருப்பலியின் புனிதத்திற்கும், பாதணிக்கும் தொடர்பில்லை. அதன் தூய்மையை இது கெடுப்பதில்லை. ஆனால் சில சுகாதார காரணங்களுக்காக, பீடத்தில் பாதணி அணிவதை தவிர்க்கலாம் [ஆனால் கழற்றி வைத்த செருப்பு தொலைந்தால் நீர்தான் பொறுப்பு]

**2. கேள்வி :-பப்பா, இந்த முறை Christmas ஐ ஆடம்பரமாக கொண்டாடலாம் தானே? ஏனெனில் நாம் தினம் தினம் மன்றாடிய எம் வன்னி மக்கள் வந்துவிட்டார்கள்தானே?**

**அன்ரனி தனுசியா, பாசையூர்.**

பதில்:- ஆம் பலர் வந்துவிட்டார்கள்தான். ஆயினும் பலர் சென்றுவிட்டார்களே (மேலே) வந்தவர்களில் பலருக்கு இருக்க வீடில்லை, உணவில்லை, வேலையில்லை, போதிய உடையில்லை, கையில் பணமில்லை, பாதுகாப்பில்லை. பலர், "ஏன் வந்தோம்" என்று சலித்துக் கொள்கிறார்கள். நீர் மன்றாடி அவர்களை அழைத்துவிட்டு, ஆடம்பரமாக கொண்டாடுவது, உமது வீட்டுக்கு ஒருவரை அழைத்துவிட்டு, நீர் மட்டும் உண்டு குடிப்பதை போல. இம்முறையும் ஆடம்பரத்தை குறைத்து, துன்பப்பட்ட மக்களோடு சிறிய வழியிலாவது பங்குகொள்வோம்.
[ஆடம்பரம் எப்போது என்று நான் சொல்வேன்]

**3. கேள்வி :- வளனாரே, காதலை ஏன் பெற்றோர் வெறுக்கின்றனர்? இவர்களை வழிப்படுத்த உமது பதிலை கூறும்?**

**அன்ரனி அனிஸ்ரன், யாழ்ப்பாணம்.**

பதில் :- [ஏன் நான் கை காலோடு இருப்பது உமக்கு விருப்பமில்லையா?]

நாமிருவரும்
உயிருக்கு உயிராய் காதலித்தோம்
இறுதியில் திருமணம் நடந்தது.
எனக்கு கும்பகோணத்திலும்
அவனுக்கு சென்னையிலும்!

என்று ஒரு புதுக்கவிதை உண்டு. இவ்வாறு கண்மூடித்தனமான காதலால் அழிந்தவர்கள் அநேகர். இதற்காக தான் பெற்றோர் காதலுக்குப் பயப்படுகிறார்கள். எனினும் மனம் விரும்பிய வாழ்க்கையை தெரிவு செய்வதில் பெற்றோர் தம்பிள்ளைகள் அருகில் இருப்பது நல்லது. அதனால் மகிழ்ச்சியாக வாழ்வோரும் பலரே.
[ஆனால், ஒரு 20 வருடத்தின் பின் நீர் இப்படியொரு கேள்வியை கேட்கமாட்டீர். நீர் தான் கட்சி மாறி விடுவீரே]

**4. கேள்வி :- அன்புள்ள வளனாரே, இன்று வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகமாக இருக்கிறதே ஏன்?**

பதில் :- இது ஜன(நாய்)யக நாடு அல்லவா? அதுதான்! இன்று நாய்கள் வீதிகளுக்கு இறங்கியிருக்கின்றன. அதன் தொல்லையால் வீதி விபத்துக்கள்! நீர் அதை அடித்தால், சட்டம் உம்மை அடிக்குமாம். [நாய்களாய் பிறந்திட நல் மாதவம் செய்ய வேண்டுமப்பா]

(தொடரும்...)

## சிரியுங்கள்



"நீங்க அடிக்கடி தண்ணீர் குடித்துவர வேண்டும்..."
"உங்கள் மருந்தைதான் சாப்பிட்டுக்கிட்டு வரேனுங்களே!
அது போறாதுங்களா!"

# மனித உரிமைகள் கட்டுரைப் போட்டி முடிவுகள்

கரித்தாஸ் நிறுவனத்தால் தேசிய மட்டத்தில் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு "சம உரிமை வழியாக நிரந்தர சமாதானம்" எனும் தலைப்பில் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் யாழ் மாவட்ட ரீதியில் தெரிவானோர் விபரம்

**1வது இடம் –** அ. மேரி லக்ஷனா
புனித சவேரியார் ஆலயம்,
புங்குடுதீவு.

**2வது இடம் –** ஸ்ரனிஸ்லாஸ் கவிசாந்
புனித திரேசாள் ஆலயம்,
சுண்டுக்குளி.

**3வது இடம் –** வி. ஜென்சி (அஜந்தா)
இல 01, தாஸ் நகர்,
மகாறம்பைக்குளம்,
வவுனியா.

**பாராட்டுப்பெறுவோர் :-**

1) உ. சோபனா
புனித சவேரியார் ஆலயம்,
சக்கோட்டை.

2) கோ. பவித்திரா
கதிர்காமர் நலன்புரி நிலையம்,
செட்டிகுளம், வவுனியா.

3) கெ. மேரி நிறேக்கா
புனித சூசையப்பர் ஆலயம்,
அச்சுவேலி.

அருட்பணி. கி.யோ. ஜெயக்குமார்,
இயக்குனர்,
கியூடெக் - கரித்தாஸ்
யாழ்ப்பாணம்.


**100வது பிறந்தநாள் ஞாபகார்த்தமும் 20ம் ஆண்டு நினைவஞ்சலியும்**



சூசைப்பிள்ளை அருளானந்தம்
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

மலர்வு 26.11.1909 உதிர்வு 03.12.1989

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோ. 14:8)

வருடங்கள் சென்றாலும் நீங்காத்துயர்
தன்னில் நீந்துகின்றோம் நாம்
எம்மை அன்புடன் பேணிக்காத்து
கடமைதனை ஆற்றி
மறைந்துவிட்ட உங்கள்
ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

"வசந்தம்"
சூராவத்தை
சுன்னாகம். Advt-86/09



**7ம் ஆண்டு நீங்காத நினைவுகளில்...**



அமரர்
திரு. ஆதாம் தோமஸ்

மலர்வு 07.06.1942 உதிர்வு 28.11.2002

நாள்கள் கிழமைகளாகி
கிழமைகள் மாதங்களாகி
மாதங்கள் வருடங்களாகி
ஏழு ஆண்டுகள் ஓடி மறைகின்றது – ஐயா
ஏங்கிய வழிகளோடு
தாங்கியே நிற்கின்றோம் – ஐயா

உம் நினைவுகளை...
நிமலன் பாத அடிகளில் அஞ்சலிக்கின்றோம். - உம்
ஆன்மா சாந்தி பெற நிதமும் ஆசிக்கின்றோம்.

என்றும் அன்புடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பருத்தித்துறை. Advt-8/09



**DIPLOMA IN NURSING**
**(2 YEARS)**
HOLY CROSS
SCHOOL OF HEALTH SCIENCE

விண்ணப்ப இறுதி தினம் 31.12.2009
நேர்முக தெரிவு 10.01. 2010
பதிவுக் கட்டணம் 500/=
முற்பணம் 5000/=
கற்கை நெறிகட்டணம் 500/=

க.பொ.த உயர்தரத்தில் 03 பாடசித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகநல நிலையம் 769 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்

பணிப்பாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எத்துணை அருமையானது"

யாழ். மண்ணிலிருந்தா இது வெளி வந்தது? என வியக்கும் அளவுக்குப் பார்த்தும் கேட்டும் ரசித்தவர்கள் ஆச்சரியப்படும் வகையில், அண்மையில் வெளி வந்த பக்தி, இசை ஒலி, ஒளி இறுவட்டு அருட்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா அவர்களின் பல்துறை ஆற்றலை மீண்டும ஒரு முறை படம் போட்டுக் காட்டியுள்ளது.

ஆம்! ஏற்கனவே பல பக்தி, இசை ஒலி நாடாக்களைத் தயாரித்து வெளியிட்டு, அவை ஆலய வழிபாடுகளில் பிரபலமாகப் பாடப்படும் அளவுக்குப் புகழ் பெறச் செய்த அடிகளாரின் மற்றுமொரு புதுமைப்படைப்பே "எத்துணை அருமையானது" என்ற இறுவட்டாகும்.

திரு விவிலியத்தின் திருப்பாடல்களில் பன்னிரண்டு பாக்களைக் கருக் குலையாமல் தன் கைவண்ணத்தில் பாடல்களாக அமைந்து - இசைவடிவமும் காட்சியமைப்பும் கொடுத்து - கலைப் பிரியர்களுக்கும் ஆன்மீகப் பிரியர்களுக்கும் விருந்தும் மருந்தும் அளித்துள்ளார்.

மிக நீண்ட காலமாக ஒளிப்படத் துறையில் அமைதியாகப் பணியாற்றிவரும் திரு அன்ரனி தனது அதி உயர் திறமையை இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். காட்சிப்புலத்தில் பூங்காக்கள், ஆலயங்கள், கோயிற திருவிழா ஊர்வலங்கள், புதுமை நடனங்கள், நடிப்புக் காட்சிகள் அதி நவீன கணினி யுக்திக்கள் மிக அற்புதமாக ஒளிப்பதிவாகியிருப்பது "இது நமது மண்ணில் பதிவு செய்யப்பட்டதா?" என்ற உணர்வும் வினாவும் பலரிடமிருந்து எழுந்தது.

இவ்இறுவட்டில் இடம் பெறும் பாடல்கள் ஈழத்தின் புகழ் பூத்த பாடகர்களான, சங்கீத வித்துவான் பொன் சிறி வாமதேவன், ஏ.ஆர்.விஜயகுமார், தி.மேரி, ற.தாரணி, செ.தர்ஷன், பெ.றிஷாந்தி இவர்களுடன் இறுவட்டின் உருவாக்க கர்த்தாவான அருட்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா அவர்களதும் இனிய வளமிக்க குரல்களில் அமைந்து கேட்போர் உள்ளங்களைப் பக்திப் பரவசத்தில் அழ்த்தி நின்றது. ஒவ்வொரு பாடலிலும் இடம் பெறும் பாடலோடு இணைந்த நடன, நாடகக் கலைஞர்களின் உத்துளைப்பு பாடல்களுக்கு இரட்டை மெருகூட்டுகின்றது. இவற்றின் இடையிடையே வந்து போகும் எமது மண்ணின் ஆலயத் திருவிழா நிகழ்வுகள், நற்கருணைப் பவனிகள் பார்ப்போரை ஆலயதரிசனத்திற்கு இட்டுச் செல்கிறது.

அடிகளாரின் இந்தப் புனிதப் பணிக்கு யாழ் மண்ணின் தலை சிறந்த ஒலி அமைப்பு நிறுவனமான சப்தமி கலைக்கூடமும், ஒளி அமைப்பாளரும், பின்னணி இசைக்கலைஞர்களான ஆ.ஜெயராமன் (வயலின்), இ. வசந்தன் (புல்லாங்குழல்), எஸ். குமுதா (வீணை), கோ. சத்தியன் (கீ போர்ட்), சதா, வேல்மாறன் (மிருதங்கம், தபேலா), த. பிரியன் (ஒக்ரோ பாட்) ஆகியோரும் தம் கூட்டு அர்ப்பணத்தை வழங்கியுள்ளமை இறுவட்டை ரசிக்கும் போது தெளிவாகும்.

மொத்தத்தில் திருப்பாடல்களை அனைவரும் இசை, கலை வடிவங்களோடு ரசித்து உள்வாங்கும் வகையில் வித்தியாசமாக தயாரித்து வழங்கியிருக்கும் றெக்ஸ் சவுந்தரா அடிகளாரின் இம் முயற்சி கலைக்கும், ஆன்மீகத்திற்கும் "எத்துணை அருமையானது".

**கவிஞர் செ.அ. அழகராசா**

## அறிவெல்லாம் கடந்த... (2ம் பக்கத் தொடர்ச்சி)

கவலைபபடாமல் நன்றியோடு கூடிய இறை வேண்டலிலும் நிலைத்திருக்க எம்மை கேட்டு நிற்கின்றன. இவ்வாறு இறைவனில் நாமும் நம்மில் இறைவனும் வசிக்கவேண்டுமென்றால் அடிப்படையில் மனமாற்றம் இன்றியமையாத தொன்றாகும் என இன்றைய நற் செய்திப் பொழிவும் எம்மை அழைத்து, ஆழமான மன மாற்றம் என்பது தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் அதி உயர்ந்த மனதினை கொண்ட வாழ்வாகும் எனத் தெளிவாகக் கூறி நிற்கின்றது.

பகிர்தலில் இருக்கும் சுகம்
பதுக்கி வைப்பதில் இல்லை" .இதனை எப்போது மனிதன் உணர்ந்து கொள்கின்றானோ அப்போது இந்த உலகம் அமைதிப் பூங்காவாக மாறும்".

"முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி என்றும்
மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன்" என்றும் இலக்கியங்களில் நாம் வாசிக்கின்றோம். இங்கே அறிவு வசப்பட்ட வாதங்களை விட அவர்களுடைய அந்த நேரத்து இரக்க குணத்தை இன்றுவரை வரலாறு போற்றுகின்றது. எப்படியென்றால், கவிஞர் அப்துல்ர.. மான் கூறுவது போல "பாரி ஒரு அறிவான அரசன் அறிவற்ற ஆட்சி முடியாது. எனவே அவன் தரையில் படரும் முல்லையைக் கண்டதும் தனது ஊழியர்களை நோக்கி இதற்கு ஒரு அழகான பந்தல் கட்டச் சொல்லி இருக்கலாம் மாறாக அவன் இப்படி சிந்திக்கிறான் வழியிலே சில வேளை மிதி பட்டு இறந்துவிடக் கூடுமோ இந்த முல்லைச் செடி என நினைத்து அந்தக் கணமே தனது சிங்காரத்தேரை விட்டு விட்டு நடந்து செல்கிறான். அவ்வாறு சென்ற அவனது இரக்க குணமே போற்றப்படுகின்றது.

அது போலவே மழை விட்டதும் சந்தோசம் தாங்காமல் ஆடிய மயில் குளிரில் நடுங்குவதாக நினைத்துப் பேகன் தனது அரசுரிமையின் போர்வையை எடுத்து போர்த்துகின்றான். பறவை மிருகங்களுக்கு ஒருபோதுமே குளிராது. குறிப்பாக மயிலுக்கு குளிராது. பேகனும் மூடன் அல்ல. அவனும் ஒரு நாட்டினை ஆண்ட சிற்றரசன். இங்கே இரக்கம் அறிவை மறைக்கின்றது. போர்வை மயிலுக்கு கிடைக்கின்றது. (இது சிறகுகளின் நேரம் பக் 14) மேலே நாம் வாசித்தது போலவே இன்றைய நற்செய்தியும் எம்மிடம் இரக்கத்தினை கேட்டு நிற்கிறது.

இரக்கம் என்றுசொல்லும் பொழுது பணத்தையோ பொருளையோ கொடுப்பது மட்டும் தான் இரக்கம் என நினைத்து விடக் கூடாதே நன்றாக உறங்குபவர் விழித்துவிடக் கூடாதே என்று அவர் உறங்கும் பகுதியில் பூனை போல் நடந்து செல்வது கூட இரக்கம் தான். இரக்கத்தின் உயர்ந்த பரிமாணத்தினை இந்த உலகிற்கு உணர்த்தியவர் இயேசு ஆண்டவர் மட்டும் தான். அவரது மனித அவதாரமே இரக்கத்தின் உச்ச வடிவம் (பிலி 2.6-11). எனவே கொடுப்பதில் காணும் நிறைவை வேறு எதிலும் நாம் காணப்போவதில்ல. நாம் ஒரு கரம் விரித்துக்கொடுத்தால் இறைவன் இரு கரம் விரித்துக்கொடுப்பார்.

இயேசு பிறப்பின் இந்தக் காலத்திலே
தாய் தந்தையரை இழந்து யாருமே
இல்லாமல் எதிர்காலத்தை கேள்விகளோடு நோக்கும் சிறுவர்கள் சிறுமியருக்கு
நாம் என்ன செய்யப்போகின்றோம்?
"மனமார கொடுக்கும் போது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி வரும்"

## யாழ் அமலமரித் தியாகிகளுக்கு... (1ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சியைக் கொழும்புத்துறை புனித சூசையப்பர் சிறிய குருமடத்திலும், துறவற சபையோருக்கான நவசன்னியாச, சன்னியாச பயிற்சிகளை முறையே மக்கோனா, பண்டாரவளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள உருவாக்கல் தளங்களிலும் பெற்றுக் கொண்டார். இவர் தனது முதல் அர்ப்பணத்தை 08.08.2001 அன்று பண்டாரவளையில் செய்து கொண்டார். மேலும் தனது தொடர் உருவாக்கப் பயிற்சியில், மெய்யியலை கண்டி, அம்பிட்டிய தேசிய குருமடத்திலும், இறையியலை யாழ் புனித சவேரியார் பெரிய குருமடத்திலும் சிறப் புறக் கற்றுத்தேர்ந்தார். இறை பராமரிப்பில் நம்பிக்கை கொண்டவராய் தனது இறுதி அர்ப்பணத்தை 17.07.2009 அன்று செய்துகொண்டார். யாழ். ஆயர் பேரருள்திரு. இ. தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்களால் கொழும்புத் துறை புனித சூசையப்பர் ஆலயத்தில், 18.07.2009 அன்று, திருத்தொண்டராகத் திருநிலைப்படுத் தப்பட்ட இவர் மன்னார், "திருப்புமுனை" புதுவாழ்வகத்தில் திருத்தொண்டராகப் பணியாற்றினார். 14.12.2009 அன்று இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தபடவிருக்கும் இவர், எதிர்வரும் 19.12.2009 அன்று, தூய அடைக்கல அன்னை ஆலயத்தில் தனது முதல் நன்றித் திருப்பலியை நிறைவேற்றவுள்ளார்.

அருட்சகோதரன் பா. கிறிஸ்ரி நிர்மலறாஜன், சுன்னாகம் புனித அந்தோனியார் பங்கிலே, திரு திருமதி பாக்கியநாதன் றோசாறியோறாணி தம்பதியினரின் மூன்றாவது புதல்வனாய் 1979 ஆனி மாதம் 28ம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியிலும், உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

இறைவனின் அழைப்பை உணர்ந்து கொண்ட இவர், தனது ஆரம்ப குருமட பயிற்சியை கொழும்புத்துறை புனித சூசையப்பர் சிறிய குருமடத்திலும், துறவற சபையோருக்கான நவசன்னியாச, சன்னியாச பயிற்சிகளை முறையே மக்கோன, பண்டாரவளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள உருவாக்கல் தளங்களிலும் பெற்றுக்கொண்டார். இவர் தனது முதல் அர்ப்பணத்தை 08.08.2001 அன்று பண்டாரவளையில் செய்துகொண்டார். மேலும் தனது தொடர் உருவாக்கப் பயிற்சியில், மெய்யியலை கண்டி, அம்பிட்டிய தேசிய குரு மடத்திலும், இறையியலை யாழ் புனித சவேரியார் பெரிய குருமடத்திலும் சிறப்புற நிறைவு செய்தார். இறைவனின் துணையில் அசையாத நம்பிக்கை கொண்டு தனது நித்திய அர்ப்பணத்தை 17.07.2009 அன்று செய்து கொண்டார்.

கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் 18.07.2009 அன்று யாழ் ஆயர் பேரருள்திரு தோமஸ சவுந்தர நாயகம் ஆண்டகை அவர் களால் திருத்தொண்டராகத் திரு நிலைப்படுத்தப்பட்ட இவர், மன்னார், வஞ்சியன் குளம் பங்கில் திருத்தொண்டராகப் பணியாற்றினார்.

இறைவனின் குருவாக திருநிலைப் படுத்தப்படவிருக்கும் இவர், எதிர்வரும் 17.12.2009 அன்று சுன்னாகம், புனித அந்தோனியார் ஆலயத்தில் தனது முதல் நன்றித் திருப்பலியை நிறைவேற்றவுள்ளார்.

இறைவனால் அழைக்கப்பட்ட இப்பணியாளர்கள் இறை உறவில் என்றும் நிலைத்து, அவருக்கே சாட்சியம் பகர்ந்திட இக் குருக்களின் ஆண்டிலே இறை அருள் வேண்டுவோம்.

## பொதுநிலையினரின் விசுவாச... (1ம் பக்கத் தொடர்ச்சி)

**கூட்டு இயக்கம்**

திரு. F.X. அன்ரன் அவர்கள் தமது உரையில், பொது நிலையினரின் பணி, வாழ்வு, சவால் என்பது பற்றி கூறுகையில், திருநிலையினர் பொது நிலையினர் இருவரும் கூட்டாக இயங்க வேண்டும், மாற்றங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

**வினாக்கள் - ஆய்வுகள்**

12 குழுக்களாகப் பிரிக்கப்பட்ட குழுக்களிடையே வழங்கப்பட வினாக்களுக்கான ஆய்வு செயற்பாடுகள் அருள்பணியாளர் இரவிச்சந்திரனின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது. இதில் இன்றைய சூழலில் கிறிஸ்தவ வாழ்வை வாழத் தடையாக இருககும் காரணிகள் எவை? இறையாட்சிப் பணியில் பொது நிலையினரின் பங்கேற்பிற்கு தடையாக இருக்கும் காரணிகள் எவை? இறையாட்சி பணியில் பொதுநிலையினரின் பங்கேற்றலை அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்? என்ற வினாக்கள குழுக்களிடையே கொடுக்கப்பட்டு விடைகள் அலசப்பட்டன.

**அமர்வுகள்**

இம்மகாநாட்டில் இடம்பெற்ற அமர்வுகள், ஈடுபாடுகொண்ட பொதுநிலையினரான திரு. S.A.E. இரட்ணராஜா, அமரர். P. சவரி முத்து ஆகியோரின் பெயர்களில் இடம் பெற்றது சிறப்பம்சமாகும்.

## காத்திருத்தல்

இரவு பகலுக்காக காத்திருக்கிறது.
பகல் இரவுக்காக காத்திருக்கிறது.
ஆண் பெண்ணுக்காக காத்திருக்கிறான.
பெண் ஆணுக்காக காத்திருக்கிறாள்.
வாழ்க்கை மரணத்திற்காக காத்திருக்கிறது.
மரணம் வாழ்க்கைக்காக காத்திருக்கிறது.
காத்திருக்கும் விதை மரமாகிறது.
காத்திருக்கும் காய் கனியாகிறது.
வாழ்க்கை என்பது காத்திருத்தல்தான்!
எது தேவையோ அதற்காக காத்திருக்கிறோம்.
எதை உயர்வாக மதிக்கிறோமோ
அதற்காகக் காத்திருக்கிறோம்.
காத்திருத்தல் எதற்காக காத்திருக்கிறோமோ
அதன் மதிப்பைக்கூட்டுகிறது.
ஓடும் மீன் ஓட உறுமீன் வருமளவும்
காத்திருக்கிறது கொக்கு.
காத்திருக்கும் கொக்குக்கே உறுமீன்
கிடைக்கிறது.
**உனக்குக் கிடைக்காதா?**

## அற்புதத்தின் சாட்சி

**கர்த்தருக்கு ஸ்தோத்திரம்**

எனது சகோதரர் செல்வன் யோ. சுதன்ஸ் பிறைமறூபன் இவ்வருடம் யூன் மாதமளவில் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து வலது கண்பார்வை சிறிது சிறிதாகக் குறைந்து முற்றாகப் பார்வையை இழந்தார். பின்பு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு வைத்தியர்கள் Neuritis எனப்படும் வியாதியாக இருக்கலாம் என தெரிவித்தனர். மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு Asiri வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்பு அங்கிருந்து இந்தியாவில் உள்ள Sangara Nethralaya வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கும் இவ் வியாதி Neuritis என அடையாளம் காணப்பட்டதுடன் இதற்கு சிகிச்சை எவையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. எங்கள் இதயம் கவலையினால் நிறைந்து தோல்வியே முடிவாக நினைத்து மீண்டும் கொழும்பு வந்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்தோம். இறுதியாக யாழ் நகரில் மாட்டின் வீதியில் உள்ள கத்தோலிக்க அருங்கொடை நிலையத்திற்கு கொண்டு சென்றோம். அங்கு உருக்கமாக செபித்தார்கள். தம்பி பூரண சுகம் அடைந்தார். இறைவா உமக்கு ஸ்தோத்திரம்.

இறைவன் வல்லமை உள்ளவர். அவரால் முடியாதது எதுவும் இல்லை என்பதை அறிந்தோம். இதனை வாசிக்கும் எவரும் இறைவனில் நம்பிக்கை கொண்டால், நீங்கள் ஆறுதல் அடைவீர்கள். உங்கள் மனக்கவலைகள் தீரும்.

**கர்த்தருக்கு ஸ்தோத்திரம்**

**சகோதரர்**
**யோ. அமலரூபன்.**

## சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவித்தல்

2010ம் ஆண்டுக்கான சந்தாவைச் செலுத்தி உங்கள் பாதுகாவலன் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சந்தா செலுத்தாதவர்களுக்கு பாதுகாவலன் அனுப்பப்படமாட்டாது என்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

1 வருடச் சந்தா - உள்ளூர் 750/= (தபாற் செலவு உட்பட)
1 வருடச் சந்தா - வெளியூர் 2500/= (தபாற் செலவு உட்பட)

**– பாதுகாவலன் விநியோகப்பகுதி –**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர். ஞானப்பிரகாசம் பத்திநாதர்

தோற்றம் 13.07.1914 — மறைவு 11.11.2009

11.11.2009 அன்று இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தந்தைக்கு எம் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அவரது மரணத்தை அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தி அனுதாபம் தெரிவித்த மேதகு யாழ். ஆயர் அவர்கட்கும். மற்றும் அருட்தந்தையர்கள். அருட்சகோதரிகள். அருட்சகோதரர்கள். நீதிபதிகள். சட்டத்தரணிகள். உற்றார். உறவினர்கள். நண்பர்கள் மற்றும் யாவருக்கும். அன்னாரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும். மலர்வளையங்கள். கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கியவர்கட்கும். தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கட்கும். மற்றும் அன்னாரது இறுதிச்சடங்குகள் சிறப்பாக நடைபெற உழைத்த அனைவருக்கும் எம் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அலுக்கை, அளவெட்டி. Advt-88/09 குடும்பத்தினர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org